| சாட்சி : PW1<br>முத்துராசு | அ.வ.எண். 13/2021 | 19.06.2024 |
|---|---|---|

<u>குறுக்கு விசாரணை</u> தொடர்ச்சி

எனது தகப்பனார் மாசி 20.10.1992 ல் இறந்தார். எனது தகப்பனார் இறந்த பிறகு தாவா சொத்திற்கு பட்டா கேட்டு வட்டாட்சியரிடம் மனு கொடுக்கவில்லை. வழக்கு சொத்திற்கு எனது பெயரிலும், எனது தம்பி பெயரிலும் எந்த வித வருவாய் ஆவணங்களும் ஏற்படவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து எனது தகப்பனாருக்கு பாகத்தில் ஒதுக்கப்பட்டது என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். பாகப்பிரிவினை செய்து அனுபவம் செய்து வந்தோம். வாய்கறரார் பாகம் எந்த தேதி, மாதம், வருடம் ஏற்பட்டது என்றால் 24.02.1964 ல் பிரிக்கப்பட்டது. எனது தகப்பனார் மற்றும் பெரியப்பா குடும்ப சொத்துக்களை பொருத்து 1954 ம் வருடத்தில் பாகம் பிரித்துகொண்டார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தும், அதற்கு வடபுறம் உள்ள 1 ஏக்கர் 50 சென்ட் முழுவதும் 12.08.1958 ல் 4,5 பிரதிவாதிகளின் தகப்பனார் பெரியசாமியின் தனிப்பட்ட வருமானத்தில் கிரையம் வாங்கப்பட்ட சொத்து என்றும், அந்த சொத்தில் எனக்கோ, எனது தகப்பனாருக்கோ உரிமையில்லை என்றால் சரியல்ல. மேற்படி பெரியசாமி இறந்த பிறகு சர்வே எண்.277 ல் 3 ஏக்கர் 6 சென்ட் 4,5 பிரதிவாதிகளுக்கு வாரிசு உரிமையின் படி முழுமையாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பொருத்து 4,5 பிரதிவாதிகளுக்கு யூடிஆர் பட்டா ஏற்பட்டது குறித்து கோட்டாட்சியரிடம் மனு கொடுத்தேன். நான் கொடுத்த மனுவை விசாரணை செய்தார்கள். நான் கொடுத்த மனுவின் அடிப்படையில் கோட்டாட்சியர் பட்டா மாறுதல் உத்தரவு எதுவும் போடவில்லை.

எனது மனுவில் வழக்கு சொத்திற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாத காரணத்தினால் தான் அந்த மனுவின் மீது எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11 கிரைய ஆவணம் குறித்து நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.11 ஆவணத்தில் சொல்லியுள்ள சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.11 ஆவணத்திற்கும் இந்த வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11 ஆவணம் குறித்து எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் பட்டா தற்போது 4,5 பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சர்வே எண்.277 ன் சர்வே வரைபடத்தை பார்த்துள்ளேன். சர்வே எண்.277 ல் எந்த உட்பிரிவும் செய்யாமல் தான் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் எனக்கோ, எனது தகப்பனாருக்கோ எந்தவித பாத்தியமும் இல்லை என்றும், வழக்கு சொத்தில் எங்களுக்கு பாத்தியம் இல்லாத காரணத்தினால் தான் சர்வே வரைபடத்தில் எந்த உட்பிரிவும் செய்யாமல் உள்ளது என்றால் சரியல்ல. 4,5 பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற காரணத்தினால் பொய்யான காரணத்தை சொல்லி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கிற்கான முகாந்திரமும் எதுவும் இல்லாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல